**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.**
**அசல் வழக்கு எண்.186/2019**

2025ம் ஆண்டு ஜுலை மாதம் 07ம் தேதி வாதி தரப்பு சாட்சியின் **வா.சா.1**-ன் வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி திருமதி. S. சுசீலா, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சத்தியமங்கலம், என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.மணி | வட்டம் | : | தாளவாடி |
| த/பெ. | : | | மாவட்டம் | : | ஈரோடு |
| க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | தாளவாடி | வயது | : | |

**வா.சா.1 : முதல் விசாரணை**:

நான் இவ்வழக்கின் வாதி மகேந்திரனின் பவர் ஏஜெண்ட் ஆவேன். எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகளை உண்மையென நேரில் அறிந்து கையெழுத்து செய்துள்ளேன். 27.06.2008 தேதியிட்ட 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் அசல் **வா.சா.ஆ.1** ஆகவும், 18.06.2018 தேதியிட்ட வாதி தாவா 1ம் அயிட்ட சொத்தின் கிரைய பத்திரத்தின் அசல் **வா.சா.ஆ.2** ஆகவும், 21.08.2008 தேதியிட்ட வாதியின் முன்பாகஸ்த்தியர் ராஜண்ணா வடிவேல் பெயரில் உள்ள கிரைய பத்திரத்தின் அசல் **வா.சா.ஆ.3** ஆகவும், 13.03.2018 தேதியிட்ட வாதி தாவா 2ம் அயிட்ட சொத்தின் கிரைய பத்திரத்தின் அசல் **வா.சா.ஆ.4** ஆகவும், 12.12.2018 தேதியிட்ட வழக்கு சொத்தை வாதியின் பெயருக்கு மாற்றம் மற்றும் உட்பிரிவு செய்ததற்கான தாளவாடி வருவாய் வட்டாட்சியர் வழங்கிய உத்தரவின் அசல் **வா.சா.ஆ.5** ஆகவும், 31.07.2019 தேதிய வழக்கு சொத்தை பொருத்து வாதியின் பெயரில் உள்ள சிட்டா மற்றும் அ பதிவேடு கணினி வழி நகல் **வா.சா.ஆ.6** ஆகவும், 16.04.2018 தேதிய வழக்கு சொத்திற்குண்டான வாதி பெயரில் உள்ள மின் கட்டண ரசீதின் அசல் **வா.சா.ஆ.7** ஆகவும், 14.10.2019 தேதிய வாதி பிரதிவாதிகள் பெயரில் தாளவாடி காவல் நிலையத்தில் புகார் அளித்ததின் மனு ரசீது (CSR) அசல் **வா.சா.ஆ.8** ஆகவும், 13.10.2019 தேதிய பிரதிவாதிகள், வாதியின் முள்கம்பி வேலியை அகற்றிய போது எடுக்கப்பட்ட புகைப்படம் நகல் **வா.சா.ஆ.9** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

District Munsif